# வாசிப்பை வாழ்வாக்கு

**வி. ஜெயகலா**
நூலகர், திருச்சிலுவை கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012
மின்னஞ்சல்: jeyakala@holycrossngl.edu.in

**ஆய்வுச்சுருக்கம்**

*வாசித்தல் என்பது கற்றலுக்கு அப்பாற்பட்டது. மதிப்பெண்களுக்காக, தேர்வுக்காக, போட்டிக்காக, ஆழ்ந்து படிப்பது. வாசித்தல் அல்ல. சுய முன்னேற்றத்திற்காக, பொழுது போக்கிற்காக, விமர்சனத்திற்காக, தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினால் படிப்பது தான் வாசித்தல் என்பது. எல்லா நூல்களையும் ஆழ்ந்து படிக்க இயலாது. சிந்தனையை தூண்டும், அறிவு வளர்ச்சிக்கு உதவும் நூல்கள் மேலும் மேலும் வாசிக்க தூண்டும் நூல்களை தேடித் தேடி ஆய்ந்து வாசித்து, வாசித்ததை வாழ்வாக்குவதே நமது வாழ்வின் முன்னேற்றத்திற்கான வழி.*

***திறவுச் சொற்கள்:*** *புத்தகம், வாசிப்பை வாழ்வாக்குதல், வாசிப்பால் சாதித்தவர்கள். வாசகர் கருத்துக்கள்.*

**முன்னுரை**

வாழ்வை நேசிக்கிறவன் வாசிப்பை நேசிப்பான். சமூகத்தை நேசிப்பவனே, வாசிப்பை நேசிக்கிறான். தன்னை நேசிப்பவனால் மட்டும் இந்த சமூகம் நேசிக்கப்படுகிறது. தன்னை நேசிப்பவன் வாசிப்பையும் நேசிக்கிறான். வரலாற்று சுவடுகளின் காயங்களையும், கனவுகளையும், கீறல்களையும், சீறல்களையும், வாசிப்பின் வழியாகவே அறிந்து கொள்கிறான். உலகத்தை உலுக்கிப் போட்ட எத்தனையோ சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாடத்தில் பதிவேறாத எத்தனையோ வரலாறுகள் வல்லுநர்களால் பக்கம், பக்கமாக எழுதப்பட்டு ஏடுகளாகவும், புத்தகங்களாகவும் நமது பார்வைக்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. பாாப்பதற்காக மட்டுமல்ல பக்கம், பக்கமாக, வரி, வரியாகப் படித்து வரலாறுகளையும், நிகழ்வுகளையும் தெரிந்து கொள்வதற்காகவே வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வரியில் வழி மாறிய வாசகங்கள் உண்டு. ஒரு வரியில் வலிகள் கூட வலிமையாக மாறிய வரலாறும் உண்டு. இத்தகைய வலிமை மிக்க வாசிப்பை வாழ்வாக்கினால் என்னென்ன மாற்றம் வாழ்வில் நிகழும் என்பதை இந்த ஆய்வுக் கட்டுரையில் காண்போம்.

**புத்தகம் ஓர் காலக் கண்ணாடி**

“ஆதி மனிதனின் வாழ்க்கையை காட்டி இறந்த காலத்தையும்
நடைமுறை வாழ்வினைப் பகிர்ந்து நிகழ் காலத்தையும்
சீரிய திட்டமிடலில் உற்ற துணையாய் எதிர்காலத்தையும்
நமக்கு காட்டுவதில் காலக் கண்ணாடியாய் திகழ்வது புத்தகமே”

ஆம், புத்தகமானது ஓர் காலக்கண்ணாடியாக மூன்று காலங்களையும் நன்கு அறிய உதவுகிறது.

**சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள்**

எப்பொழுதோ நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு இப்பொழுதும் நாம் அறிந்து கொள்ள உதவுவது புத்தகங்கள். எங்கோ நடந்ததைக் கண்டுபிடித்து அதை இங்குள்ள நமக்கு எடுத்து விளக்குபவை நூல்களே. எவரோ அறிந்ததை நாமும் தெரிந்து கொள்ளத் துணை நிற்பவை நூல்கள் தாம்.

அதனால் தான் புத்தகத்தின் மேன்மை குறித்து "உன்னிடம் எதையும் எதர்பார்காமல் தன்னை முழமையாக உனக்கு அளிக்கும் நண்பனே புத்தகங்கள்" என்கிறார் அமெரிக்க கவிஞர் லாங்.ஃ.பெலோ.

நண்பர்கள் கூட சில சமயங்களில் சறுக்கிட நேரலாம். ஏமாற்றி விடக்கூடும். ஆனால் நம்மை எப்போதும் கைவிட்டு விடாத நல்ல நண்பர்கள் புத்தகங்களே. (My never failing friends are books with whom I converse day by day) என்கிறார் கவிஞர் ராபர்ட் கதே.

"வாசிப்பு ஒருவனை எப்போதும் தயாராக இருப்பவனாக உருவாக்குகிறது" ("Reading maketh a ready man") என்கிறார் பிரான்ஸிஸ் பேகன். ஆம் வாழ்க்கையின் எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளுகிற பேராற்றலைப் புத்தகங்கள் நமக்கு புகட்டுகின்றன. சிறந்த நூல்களை, சிந்தனையை தூண்டி வளர்க்கும் நூல்களை, மனதை உழுது பண்படுத்தி பயன் விளைக்கும் நூல்களைப் படிக்க வேண்டும்.

**நூல் படிக்கும் பழக்கம்**

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சோவியத் இரஷ்யாவில் இந்திய தூதுவராக பணியாற்றிய போது ஒரு நாளில் பன்னிரண்டு மணிநேரம் படிப்பதிலும், படித்ததைச் சிந்திப்பதிலும் செலவிட்டாராம். இந்தச் செயலே அப்போதைய இரஷ்யாவின் அதிபராக மட்டுமல்ல சர்வாதிகாரியாகவும் இருந்த ஸ்டாலின் அவர்களின் நன்மதிப்பை பெற காரணமாயிருந்தது. இரஷ்ய நாடு இந்தியாவை மதிக்காத காலம் அது. இரும்பு மனிதர் என்றழைக்கப்பட்ட ஸ்டாலின் இதயத்தையும் கவர்ந்த ஒரு பேரறிஞராக, தத்துவ ஞானியாக டாக்டர் இராதாகிருஷ்ணன் விளங்க காரணம் அவர் "கற்றனைத்தூறும் அறிவு" என்ற வள்ளுவர் குறளுக்கேற்ப அவருடைய நூல் படிக்கும் பழக்கமே.

**வாங்கிப் படி**

எட்டையபுரம் மகாராஜாவுடன் சென்னை சென்ற பாரதியார். "செல்லம்மா! வரும் போது உனக்கு தேவையான சாமான்கள் வாங்கி வருகிறேன்.". என்று மனைவியிடம் சொல்லி சென்றவர் மகாராஜா கொடுத்த பணத்தில் மூட்டை மூட்டையாய் புத்தகங்கள் வாங்கி வந்து விட்டார். கோபமாய் பார்த்த மனைவியிடம் "செல்லம்மா அழியும் பொருளைக் கொடுத்து அழியாத செல்வத்தைக் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறி சமாதானம் செய்தாராம். ஆதலால் நாம் புத்தகத்தை வாங்கி படிக்க வேண்டும்.

**எழுத்தாளரோடு வாசகன் பேசுகிறான்**

ஒருவன் ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது அதன் கருத்துகளை உட்கொள்ளும் போது அவன் அப்புத்தகத்தின் ஆசிரியரோடு உரையாடிக் கொண்டிருக்கிறான் என்று பொருள். அந்த

வகையில் எழுத்தாளனின் நற்பண்புகள், கதாபாத்திரத்தின் நற்பண்புகள் அவன் உள்ளத்தில் வந்து அவனை நல்லவனாக மாற்றும்.

**உண்மையான பாலை நிலம்**

'மணலும் மணல் சார்ந்த இடமும்' பாலை நிலம் எனக் கூறுகின்றது இலக்கணம். ஆனால் உண்மையான பாலை நிலம் அதுவல்ல. எங்கே புத்தகங்கள் இல்லாமல் காணப்படுகின்றதோ அது தான் பாலை நிலம் என மெய்யாக்கப்பட்டுள்ளது. ஆகவே உங்கள் இல்லங்கள் நல்ல நிலமாக விளங்க வேண்டுமெனில் நல்ல புத்தகங்களை சேமிக்க பழகுங்கள். அதுவே வாழ்க்கைக்கான சிறந்த முதலீடு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**புத்தகம் வாசித்து சாதித்தவர்கள்**

உலகின் சிறந்த தலைவர்கள் அனைவருமே புத்தகங்களை நேசிப்பவர்களாகவும், வாசிப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அதிகம் வாசிப்பவர்களே நல்ல உரை ஆற்றுபவர்களாகவும், வாழ்ந்து காட்டுபவர்களாகவும் உள்ளனர். உதாரணமாக

- பில்கேட்ஸ் வருடத்திற்கு 50 புத்தகங்கள் வாசிப்பாராம். அதாவது வாரத்திற்கு ஒரு புத்தகம் வாசித்து முடிப்பாராம்.
- இலான் மஸ்க் தினமும் 10 மணி நேரம் வாசிக்கும் பழக்கமுடையவராம்.
- கார்லைல் குருப்-ன் நிறுவனர் 10 மணி நேரம் வாசிக்கும் பழக்கமுடையவராம்.
- பராக் ஒபாமா தனது சிறு வயதிலிருந்தே அதிக புத்தகங்களை வாசிக்கும் பழக்கமுடையவர். அதன் மூலமாகவே அவர் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் ஒரு நாட்டின் அதிபராகவும் மாற முடிந்தது என்கிறார்.
- 'Rich Habits' நூலின் எழுத்தாளர் தாமஸ் கார்லி கூறும் போது மனிதனுக்கு அறிவு என்பது பரந்த வாசிப்பினால் தான் கிடைக்கப்பெறுகிறது. ஒருவர் வெற்றியான ஒரு வாழ்க்கை வாழ விரும்பினால், வாசிப்பதில் அதிக நேரத்தை செலவிட வேண்டும். சிறந்த நூற்களை வாசிப்பதன் மூலமே தினமும் வெற்றியை ருசிக்க முடியும் என்கின்றன்றார்.

**வாசிப்பால் படிப்போடு பண்பும் வளரும்**

ஆபிரகாம் லிங்கன் புத்தகம் வாசிக்கும் ஆர்வம் கொண்டவர், பெரும்பாலான நேரங்களில் அவர் புத்தகமும் கையுமாகவே இருப்பார். ஒருமுறை அவரது நண்பர் ஒருவர் புத்தகம் படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின்பு எதற்காக எப்போதும் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு லிங்கன் 'நான் பணம் சேர்ப்பதற்காக படிக்கவில்லை. பணம் வரும் போது எப்படி பண்புடன் வாழ வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதற்காகவே படித்துக் கொண்டிருக்கிறேன் என்றார்.

ஆம் அமெரிக்க நாட்டின் குடியரசு தலைவராக ஆபிரகாம் லிங்கன் ஆட்சி பொறுப்பெடுத்து பணியாற்றும் போது முன்பு அவர் படித்த புத்தகங்கள் மக்களை நல்லாட்சியில் வழிநடத்தவும், அவரும் பண்புடன் வாழ்ந்து, பிறரையும் வாழ்விக்கவும் வழிகாட்டியது.

**வாசிப்பால் சாதித்தவர்கள்**

புத்தகத்தை வாசித்ததன் காரணமாக தங்களுக்குள் இருக்கும் அகமனம் திறக்கப்பட்டு பலர் மகான்களாகவும், மகாத்மாக்களாகவும் மாறியிருக்கின்றார்கள்.

- மோகன்தாஸ் காந்தியாக இருந்தவரை, மகாத்மா காந்தியடிகளாக மாற்றியது – ஜான்ரஸ்கின் எழுதிய “கடையனுக்கும் கடைத்தேற்றம்” என்ற புத்தகம்.
- வெங்கட்ராமனாக இருந்தவரை மகான் ஸ்ரீரமணமகரிஷியாக மாற்றியது- சேக்கிழாரின் “பெரிய புராணம்” என்ற புத்தகம்.
- 33 ஆண்டுகள் லண்டன் நூலகத்தில் கிடந்து கார்ல்மார்க்ஸ் எழுதிய “மூலதனம்” என்ற புத்தகம் உலக சமுதாயத்தை உழைக்கும் வர்க்கத்தை உயர்த்தி பிடித்தது.
- காளிதாசன் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள் இப்போது இல்லை, ஆனால் அவர் எழுதிய “சாகுந்தலம்” இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**புத்தகம் பற்றி அறிஞர்கள் கருத்துக்கள்**

- ‘புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிற்கும் நிறுத்தப்பட்டுள்ள கலங்கரை விளக்கங்கள்’ என்கிறார் இ.வி. விப்பன் என்ற அறிஞர்.
- ‘தலைமுறைகள் கடந்து விட்டாலும் நிலைத்து நிற்கும் அறிஞர்களின் கருவூலங்களாக விளங்குவது புத்தகங்கள்” என்கிறார் அறிஞர் ஜோசப் அடிசன்.
- “சிறந்த நூல்கள் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்களை தன்னகத்தே தாங்கியுள்ள எல்லையற்ற சமுத்திரங்கள்” என்கிறார் பண்டிட் ஜவஹர்லால் நேரு.

**முடிவுரை**

தினசரி ஒரு மணி நேரம் படித்தால் ஒரு வாரத்தில் ஒரு புத்தகத்தை படித்து முடித்து விடலாம். ஒரு வருடத்தில் ஐம்பத்திரண்டு புத்தகங்களை முடித்துவிடலாம். அதிலிருந்து பெறுகின்ற அறிவு எநத துறையில் நீங்கள் பணியாற்றினாலும் உங்களை உயர்வடைய செய்வது உறுதி. நல்ல உணவு உடலை பராமாீப்பது போல நல்ல புத்தகங்களைப் படிப்பது மனதை பராமாீக்கிறது என்று கூறுகிறார் வெற்றி பெற சிந்தியுங்கள் என்ற புத்தகத்தை எழுதிய வால்டர் டோயல் ஸ்டேபிள்.

**பார்வை நூல்கள்**

1. சுந்தர்ராஜ் க. வாசிப்பும் வாழ்வும், பாரட் இயக்கம், வடக்கன்கரை, கன்னியாகுமரி ; 2020
2. மதியழகன் பெரு. சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள், லாட்சன் பிரின்டர்ஸ் ; 2020
3. அஜித் சிங் ஜாண் . ஜெ. புத்தகம் ஒரு சிறந்த நண்பன், லாட்சன் பிரிண்டர்ஸ் ; 2020